FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

~~(குற்ற விசாரணை முறை சட்டம்)~~ Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081646

1. District : தீண்டுக்கல் PS: VdAC Year: 2025 FIR No.: 09/25 Date: 06.08.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended the prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 28.07.25 at 11.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 04.08.25 at 11.00 hrs

Time Period : Time from : Time to : 05.08.25 at 01.33 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 05.08.25 Time : 21.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 06.08.25 Time : 06.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்துமூலம்
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 40 km தென்மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், அய்யம்பாளையம், அத்தூர் தாலுகா, தீண்டுக்கல் மாவட்டம்.
முறைக் காவல் எண். முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. கார்த்திகேயன் (b) Father's/ Husband's Name : சாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 42/25 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : கூலி (g) Address : 4/3-32, கிழக்கு மந்தை தெரு, அய்யம்பாளையம், அத்தூர் தாலுகா, தீண்டுக்கல்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. கிராமேஷ், கிராம நிர்வாக அலுவலர், அய்யம்பாளையம், அத்தூர் தாலுகா, தீண்டுக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. கார்த்திகேயன்

06/08/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 06-8-2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.08.25 at 09.30hrs

Name: பெயர் ஆ. போதீசுவரன்
Rank: நிலை ..... No. எண் .....
காவல் ஆய்வாளர்,
உ.தி.க. பணி,
திண்டுக்கல்

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:9/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் நேற்று 05.08.2025-ம் தேதி இரவு 21.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல், ஆத்தூர் தாலுகா, அய்யம்பாளையம், கிழக்கு மந்தைத்தெரு, கதவு எண்.4/3-32-ல் வசிக்கும் திரு.சுப்பன் மகன் திரு. S.கார்த்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று இன்று 06.08.2025-ம் தேதி காலை 06.00 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். S.கார்த்திகேயன், த/பெ.சுப்பன், கதவு எண். 4/3-32, கிழக்கு மந்தைத்தெரு, அய்யம்பாளையம், ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல். பெறுநர். உயர்திரு.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்து விட்டு தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். எனது தாய் மற்றும் தந்தை இறந்து விட்டனர். எனது உடன்பிறந்த சகோதரி செல்வி ஊனமுற்றவராக இருப்பதால் திருமணமாகாமல் தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் உள்ள நேரு ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில் வசித்து வருகிறார். நான் கடந்த 16.03.2022-ம் தேதி எனது ஊரைச் சேர்ந்த திரு.முத்துசெட்டியார் என்பவரிடமிருந்து நான் குடியிருக்கும் வீட்டின் அருகில் சுமார் 288 சதுர அடியில் உள்ள மதராஸ் இலாகட வீடும் அதனுடன் சேர்ந்த RCC அறையும் ரூ.1,95,000/- க்கு கிரையம் பெற்றேன். அது ஆவண எண் 646/2022 ஆக அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீட்டிற்கு எனது பெயரில் பட்டா பெறுவதற்காக கடந்த 29.05.2024-ம் தேதியும், 20.05.2025-ம் தேதியும் பட்டிவீரன்பட்டியில் உள்ள சித்ரா இ சேவை மையத்தில் விண்ணப்பித்தேன். அந்த விண்ணப்ப எண்கள் 2024/0105/13/483080, 2025/0105/13/481584 ஆகும். மேலும் கடந்த 23.05.2025-ம் தேதி ஆத்தூர் தாலுகா ஆபிஸில் நடைபெற்ற ஜமாபந்தியில் ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். ஆனால் ஆன்லைனில் கொடுத்த இரண்டு விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுவிட்டன. மேற்படி இரண்டு விண்ணப்பங்களும் எதற்காக நிராகரிக்கப்பட்டது என்ற காரணம்

எனக்கு தெரியாததால் அய்யம்பாளையம் சர்வேயர் திரு.ஜீவன் அவர்களிடம் விபரம் கேட்டேன். அவர் முதலில் VAO வைப் பார்த்து உங்கள் பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்க்க வேண்டும். அதற்கு பின்பு தான் உங்கள் பெயரில் தனிப்பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறினார். அதன்பேரில் கடந்த 21.07.2025-ம் தேதி நான் அய்யம்பாளையம் VAO அலுவலகம் சென்று என்னுடைய கிரையப்பத்திரம், மூலப்பத்திரம் மற்றும் இ சேவை மையத்தில் கொடுத்த பட்டா எண் 4399 ஆகியவற்றை VAO திரு.ரமேஷ் என்பவரிடம் காண்பித்து பட்டா வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டேன். அப்போது சர்வேயர் திரு.ஜீவனும் VAO அருகில் அமர்ந்திருந்தார். VAO மேற்படி பட்டாவை பார்த்துவிட்டு உங்களுடைய சொத்தின் சர்வே எண்ணில் ஜெயமணி என்பவரிடமிருந்து மோகன் என்பவர் கிரையம் பெற்றுள்ளதாக உள்ளதே என்று கேட்டார். அதற்கு நான் ஜெயமணியிடம் இருந்த முத்துசெட்டியார் கிரையம் பெற்றதாகவும் அதன்பிறகு மோகன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளதாகவும் அதே சர்வே எண்ணில் 288 சதுரஅடி முத்துசெட்டியார் எனக்கு விற்பனை செய்துள்ளதாகவும் கூறினேன். அதற்கு அவர் ஜெயமணியிடம் இருந்து முத்துசெட்டியார் கிரையம் பெற்றதற்கான ஆவணத்தை கொண்டு வந்து கொடுக்குமாறும் பட்டா வேண்டி ஆன்லைனில் விண்ணப்பம் செய்யுங்கள் என்றும், பின்பு மேற்படி பட்டாவில் உங்கள் பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்க்க ஏற்பாடு செய்கிறேன் என்றும் கூறினார். நான் அதன்பிறகு மிகவும் சிரமப்பட்டு ஜெயமணியிடம் இருந்து முத்துசெட்டியார் கிரையம் பெற்றதற்கான ஆவணம் எண் 859/2000 மற்றும் அதற்கான வில்லங்கசான்று ஆகியவற்றை எனது நண்பர் மூலம் பெற்று கடந்த 28.07.2025-ம் தேதி பட்டிவீரன்பட்டியில் உள்ள சித்ரா இ சேவை மையத்தில் காலை 10.50 மணிக்கு பதிவேற்றம் செய்து விட்டு அந்த ஒப்புகை சீட்டுடன் மற்ற ஆவணங்களையும் அய்யம்பாளையம் VAO அலுவலகத்திற்கு அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு எடுத்துச்சென்று அங்கிருந்த VAO திரு.ரமேஷ் என்பவரிடம் காண்பித்தேன். அப்போது அவர் ஆவணங்களை பார்த்துவிட்டு கூட்டுப்பட்டாவிற்கு ஏற்பாடு செய்கிறேன் ஆனால் அதற்கு கொஞ்சம் செலவாகும் என்றார். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். அதனால் அவர் என்னுடைய செல்போன் எண் 88255 74901 ஐ கேட்டு நான் கொடுத்த ஆவணத்தில் பென்சிலால் எழுதி விட்டு எனக்கு போன் செய்வதாக கூறினார். ஆனால் ஒரு வாரமாகியும் போன் செய்யாததால் நான் அவரை கடந்த

04.08.2025 ம் தேதி காலை 11.00 மணிக்கு அவருடைய அலுவலகத்தில் சந்தித்து பட்டா மாறுதல் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் ரூ.3,000/- கொடுங்கள் என்று கேட்டார். நான் அவரிடம் எற்கனவே ரூ.3,000/- செலவழித்து தான் ஆவணங்களை பெற்று வந்தேன் என்று கூறினேன். அதற்கு அவர் கூட்டுப்பட்டாவில் உங்களுடைய பெயரை சேர்க்க வேண்டும் என்றால் எனக்கு ரூ.3,000/- கொடுக்க வேண்டும் என்று கூறினார். பின்பு நான் அவரிடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்றும் கேட்டேன். அதற்கு அவர் ரூ.500/- குறைத்துகொண்டு ரூ.2,500/- கொண்டு வருமாறு கூறினார். பின்பு நான் பணத்தை ஏற்பாடு செய்ய முடியாததால் இன்று வேலைக்கு சென்றுவிட்டேன். பின்பு மதியம் சுமார் 01.33 மணிக்கு அய்யம்பாளையம் VAO திரு.ரமேஷ் அவர்கள் அவருடைய அலைபேசி எண் 97514 65343 லிருந்து என்னுடைய அலைபேசி எண் 88255 74901-க்கு தொடர்பு கொண்டு இன்று பணம் கொண்டு வருவதாக சொன்னீர்களே, ஏன் இன்னும் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் பணத்தை ரெடி பண்ணுவதற்காக வேலைக்கு வந்து விட்டேன் என்று சொன்னேன். அப்போது அவர் மேற்படி பட்டாவில் ஜெயமணி பெயருக்கு பதிலாக என்னுடைய பெயரை இணைத்து கூட்டுப்பட்டா பெறுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றும் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.2,500/-ஐ நாளை 06.08.2025-ம் தேதி காலை அலுவலகத்தில் வந்து கொடுக்குமாறும் கூறினார். நானும் சரி கொண்டு வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் கண்டிப்பாக கொண்டு வருவீர்களா என்று கேட்டார். நானும் அவசியம் காலையில் வந்து விடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி உங்கள் விண்ணப்பத்தை மேலே அனுப்பிவிடுகிறேன் என்று சொன்னார். பின்பு மதியம் சுமார் 01.46 மணிக்கு என்னுடைய செல்போனில் ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில் தங்களுடைய விண்ணப்பம் கிராம நிர்வாக அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டு மண்டல துணை வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வந்திருந்தது. என்னிடம் நாளை 06.08.2025-ம் தேதி காலை பணம் கொண்டு வருமாறு கூறிவிட்டு என்னுடைய விண்ணப்பத்தை அங்கீகரித்து மேலதிகாரிக்கு அனுப்பியுள்ளார். பின்பு நான் யோசனை செய்ததில் எனது பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு ரூ.2,500/- லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.2,500/- லஞ்சமாக கேட்ட அய்யம்பாளையம் VAO திரு.ரமேஷ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த புகாருடன் நான்

கடந்த 28.07.2025-ம் தேதி இ சேவை மையத்தில் விண்ணப்பித்த ஒப்புகைசீட்டு 2025/0103/13/393986 நகல், 23.05.2025-ம் தேதி ஜமாபந்தியில் கொடுத்த விண்ணப்பத்தின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும் அய்யம்பாளையம் VAO திரு.ரமேஷ் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,500/-ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (S.Karthikeyan, 05.08.2025)

Sir, Received the complaint on 05.08.2025 at 21.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.09/2025, u/s.7(a) of P.C Act 1988, as amended in 2018, on 06.08.2025 at 06.00 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 06.08.2025)

Original FIR along with written complaint of Tr.S.Karthikeyan, S/o.Tr.Subban, Door No.4/3-32, East Mandhai Street, Ayyampalayam, Athoor Taluk, Dindigul and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Judge Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

JRupa 06/08/25

(J.Rupa Geetharani),
Inspector of Police,
V&AC,
Dindigul